**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.178/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | சித்ரா, வயது 38 |
| Father Name/Husband Name | : | கட்டிபொன் |
| Village | : | துரைசாமிபுரம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of JUNE 2025.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது துரைசாமிபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் ஊர்காரர். அ.சா.1 யை எனக்கு தெரியும். அவர் எனது தம்பி. 30.09.2024 ஆம் தேதி இரவு 11.45 மணியளவில் துரைசாமியாபுரத்திலிருந்து திருச்செந்தூர் செல்வதற்காக வீடியோகோச் வாகனத்தில் ஆஜர் எதிரி ஓட்ட கிளம்பினோம். என்னுடம் வண்டியில் மேலும் 20 பேர் இருந்தார்கள். பஞ்சவர்ணம், அன்னபாக்கியம், சந்திரகலா, இந்திரா, அபர்ணா, கார்த்திக்குமார், குமார், அமுதா, ராஜா, கார்திகா, சக்கம்மாள், சந்தியா, ஆகாஷ், விஷால், வைஷ்ணவி, சுபாஷ், சந்தோஷ், ஜெகதீஷ், கார்த்திகா, ஹரி, மஞ்சு ஆகியோர் வாகனத்தில் சென்று கொண்டு இருந்தோம். இரவு 01.15 மணியளவில் கோவில்பட்டி – எட்டயபுரம் ரோட்டில் வி.ஓ.சி. பள்ளிக்கு அருகே மேற்கே இருந்து கிழக்காக சென்று கொண்டு இருக்கும்போது நாங்கள் சென்ற வாகனம் அதிவேகமாக சென்று வேகத்தடையை கவனிக்காமல், சென்ட்ர் மிடியன் மோதி விபத்து ஏற்பட்டது.

2 எனது அம்மா பஞ்சவர்ணம் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். அன்னபாக்கியத்திற்கும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. எனக்கு இடதுபக்க கையில் காயம் ஏற்பட்டது. எனது மகன் சந்தோஷ்க்கு இடது கால் முட்டியில் காயம் ஏற்பட்டது. வேனில் பயணம் செய்த மற்றவர்களுக்கும், காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்துக்கொள்ள ஆம்புலன்ஸ் மூலமாக கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். காயம்பட்ட எனது மகன் என்னுடன் கோவில்பட்டி அரசு மருத்துமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தான். அவனை அங்கிருந்து சிவகாசியில் உள்ள தனியார் மருத்துமனையில்

சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தேன். நான் நாமக்கல்லில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். போலீசார் என்னை விசாரித்து கொண்டார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் நான், பன்னீர்செல்வம் ஆகியோர்கள் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். சந்திரகலா, பன்னீர்செல்வம் ஆகியோர்கள் கையொப்பம் செய்த பேப்பரில் யார் எழுதினார்கள் என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்க அழைப்பாணை அனுப்பவில்லை என்றால் சரிதான்.

4. விபத்து நடந்தவுடன் போலீசார் அ.சா.1 யை மட்டும் விசாரித்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் என்னை நேரிடையாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் நள்ளிரவு நேரம் என்பதால் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தீர்கள் என்றால் சரியல்ல. போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தபோது வேனின் எந்த பகுதியில் அமர்ந்து இருந்தீர்கள் என்று சொன்னீர்களா என்றால் சொன்னேன். நான் பின்பக்கம் சீட்டில் உட்கார்ந்து இருந்ததாக போலீசாரிடம் சொன்னேன்.

5. வீடியோகோச் வேனில் இருக்கை உயரமாக இருக்கும் என்பதால் பின்னாடி இருப்பவர்கள் முன்னாடியில் இருப்பவர்களை பார்க்க இயலாது என்றால் சரிதான், நான் நடு இருக்கையில் உட்கார்ந்து இருந்தேன். விபத்து நடந்த இடத்திற்கு நான்கு திசைகளிலும் என்னென்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், வி.ஓ.சி. பள்ளி இருந்தது. விபத்து நடந்த சப்தம் கேட்டு விபத்து குறித்து தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

6. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்களில் 200 மீ தொலைவில் வேகத்தடை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், வேகத்தடைக்கும் சுமார் 200 மீ தொலைவு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது, விபத்து நடந்து சப்தம் கேட்டு நான் பார்த்ததால் எனக்கு ஒன்றும் தெரியாது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் ஆட்கள் சென்றார்களா என்றும்,

வாகனத்தின் குறுக்கே கால்நடைகள் சென்றதா என்றும், உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரிடையாக தெரியாது. எனக்கு காயம்பட்டதற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் அதிக நஷ்ட ஈடு தொகை பெற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.